IN THE COURT OF ASSISTANT SESSIONS JUDGE, TIRUVARUR.
PRESENT: Thiru. G. Krishnan, B.A., L.L.B.,
Assistant Sessions Judge,
Tiruvarur.

**S.C.No.28/2019**

Deposition of witness for அ.த.சா.16 { Prosecution PW.16
{ Defence
{ Court

1. Name : திரு. செல்வம்

2. Father Name :

3. Village :

4. Taluk :

5. Calling :

6. Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of

**நாள். 30.09.2024**

**(1 முதல் 4 வரையிலான எதிரிகள் ஆஜர். 5 முதல் 7 வரையிலான எதிரிகள் ஆஜராகவில்லை, அவர்களுக்காக அவரது தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி வழக்கு விசாரணை மேற்கொள்ள அனுமதிக்க வேண்டி தாக்கல் செய்த குவிமுச பிரிவு 317 ன் கீழான மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை**

நான் தற்போது தமிழ்நாடு காவல்துறையில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து, ஓய்வு பெற்று கதவு எண்.9, வடக்கு வள்ளுவர்தெரு, கும்பகோணம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 29.11.2016 ஆம் தேதி நான் குடவாசல்

காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியிலிருந்தபோது, மேற்படி காவல்நிலையத்தின் உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி என்பவர் பதிவு செய்துவைத்திருந்த, குடவாசல் காவல்நிலைய குற்ற எண்436/2016 என்ற வழக்கு கோப்பினை எனது புலன்விசாரணைக்காக பெற்றுக்கொண்டேன். அன்றே பகல் 1 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் தெட்சிணாமூர்த்தி, தங்கராசு முன்னிலையில் சமபவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். பார்வை மகசரில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பார்வை மகசர் அ.சா.ஆ.22. மாதிரிவரைபடம் அ.சா.ஆ.23. பார்வை மகசர் சாட்சிகளை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகள் முரளி, முத்துகிருஷ்ணன், குஞ்சுப்பிள்ளை, ஜெயா, மாரியம்மாள், பசுபதி ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அன்று பிற்பகல் 3 மணியளவில் காட்டூர் பேருந்து நிறுத்தமருகே நின்றிருந்த இவ்வழக்கின் எதிரிகளான தமிழ்வாணன், தமிழ்குமரன், கலையரசி ஆகிய மூவரையும் கைது செய்தேன். பின்னர் பிற்பகல் 3.15 மணியளவில் எதிரி தமிழ்வாணன் என்பவர் சாட்சிகள் ரெங்கநாதன் மற்றும் ரவி ஆகியோர் முன்னிலையில் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல்வாக்குமூலத்தில் என்னுடன் வந்தால், நாங்கள் தூக்கி போட்ட அருவாளையும், ஆணி பிடுங்கும் பாரையையும் எடுத்து தருகிறேன் என்றும், நாங்கள் தகராறு செய்ய பயன்படுத்திய, நான் தற்போது வைத்துள்ள

டி.என்.51 எப்.1351 என்ற டிவிஎஸ் ஸ்போர்ட் இருச்சக்கர வாகனத்தையும் ஆஜர் செய்வதாக கூறினார். அதனடிப்படையில் மாலை 4.30 மணியளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் 1 ஆம் எதிரி தமிழ்வாணணிடமிருந்து மேற்படி இருச்சக்கர வாகனத்தை மகசர் மூலம் கைப்பற்றினேன். அதற்கான ஆவணம்தான் தற்போது காட்டப்படுவது. அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.24. அன்று மாலை 5.15 மணியளவில் எதிரி தமிழ்வாணன் எங்களையும் மற்றும் சாட்சிகளை அழைத்துச்சென்று காட்டூர் காளவாய்க்கால் மதகிற்கு கீழிருந்த சுமார் 40 செ.மீ நீளமுள்ள அருவாள் ஒன்றையும், சுமார் 90 செ.மீ நீளமுள்ள ஆணிபிடுங்கும் கம்பிபாரை ஒன்றையும், எடுத்து ஆஜர் செய்ததை மகசரில் கைப்பற்றினேன். அதற்கான கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.25. 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் வழக்கு சொத்துக்களை என்னால் கண்டுபிடிக்கமுடிந்தது. 1 ஆம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில், **என்னுடன் வந்தால், நாங்கள் தூக்கி போட்ட அருவாளையும், ஆணி பிடுங்கும் பாரையையும் எடுத்து தருகிறேன் என்றும், நாங்கள் தகராறு செய்ய பயன்படுத்திய, நான் தற்போது வைத்துள்ள டி.என்.51 எப்.1351 என்ற டிவிஎஸ் ஸ்போர்ட் இருச்சக்கர வாகனத்தையும் ஆஜர் செய்வதாக** கூறிய பகுதி மட்டும் அ.சா.ஆ.26. கைது செய்யப்பட்ட எதிரிகளை கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நீதிமன்ற காவலுக்கு தக்க வழிக்காவலுடன் நீதிமன்றம் ஆஜர் செய்தேன். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். அருவாள் மற்றும்

கடப்பாரையை ஆஜர் செய்ததற்கான படிவம் 91 அ.சா.ஆ.27. இருச்சக்கர வாகனத்தை ஆஜர் செய்ததற்கான படிவம் 91 அ.சா.ஆ.28. தற்போது காட்டப்படும் புகைப்படத்திலுள்ள இருச்சக்கர வாகனம்தான் நான் 1 ஆம் எதிரி கொடுத்த ஒப்புதல்வாக்குமூலத்தில் கைப்பற்றியது. இருச்சக்கர வாகனத்திற்கான புகைப்படம் இரண்டு அ.சா.ஆ.29 ன் வரிசை. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கடந்த 25.01.2017 ஆம் தேதியன்று இவ்வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சையளித்த மருத்துவர்கள் நடராஜசேதுபதி, ரஞ்சித், கோகுலகிருஷ்ணன், ஷாபி, ராஜேந்திரன் ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் மற்றும் காயச்சான்றிதழ்கள் பெற்றேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கின் சட்டபிரிவுகளை இதச பிரிவுகள் 147, 148, 341, 294(பி), 323, 324, 452, 506(2), 307 என்பதை இதச பிரிவுகள் 147, 148, 294(பி), 323, 307,451, 334,335, 149, 109, கீழ் சட்ட மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். அந்த சட்ட மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.30. இதர எதிரிகள் முன்பிணையில் ஆஜராகிவிட்டனர். வழக்கின் புலன்விசாரணை முடித்து குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கு சம்பவங்கள் எந்த எந்த இடத்தில் நடந்ததாக எனது புலன்விசாரணையில் தெரியவருகிறது என்றால், வடகண்டன் கரைவீரன் காலனி தெரு திருப்பத்தில் ஒரே சம்பவம் தான் நடந்தது. அதை தவிர வேறு இடங்களில் கடந்த 29.11.2016 ஆம் தேதி எதிரிகளுக்கும், இவ்வழக்கின் சாட்சிகளான முரளி வகையறாவிற்கும் ஏதாவது சம்பவம் நடந்ததா என்றால் இல்லை. அதனால் கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 8 மணியளவில் அ.சா.1ன் தந்தையான அ.சா.3 குஞ்சுப்பிள்ளைக்கும் அ.சா.2 முத்துகிருஷ்ணன் மனைவி ஜெயாவிற்கும் கடந்த 29.11.2016 ஆம் தேதி திருக்கண்ணமங்கையில் உள்ள அவர்கள் வீட்டிடம் சம்பவம் நடந்து காயம்பட்டதாக சொல்லி அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்த விவரம் தவறுதானே என்றால் தவறுதான். அதேபோன்று அ.சா.1 முரளி தனது அப்பாவான அ.சா.3 குஞ்சுப்பிள்ளையையும், தனது அண்ணான முத்துகிருஷ்ணனையும் இருச்சக்கர வாகனத்தில் உட்கார வைத்துக்கொண்டு சென்றபோது ரோடின் குறுக்கே வந்த அ.சா.5 பசுபதி மீது மோதி மேற்படி இருச்சக்கர வாகனம் கீழே விழுந்ததில் காயம் ஏற்பட்டதாக சொல்லிதான் அ.சா.5 பசுபதி திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அந்த விபத்தினை ஏற்படுத்திய முரளி மீது ஏதாவது வழக்கு பதிவு செய்தோமா என்றால் இல்லை. இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாகவே, அ.சா.1 முரளியும், அண்ணி

கலையரசிக்கும், 1 ஆம் எதிரி தமிழ்வாணனுக்கும் இருந்து வந்த கள்ளத்தொடர்பு சம்பந்தமான ஏற்பட்ட பிரச்னையால், முரளி, அவரது அண்ணன் முத்துகிருஷ்ணன், முரளியின் அப்பா குஞ்சுப்பிள்ளை மற்றும் முரளியின் அண்ணி ஜெயா ஆகியோர்கள் மீது குடவாசல் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதாகவும், சாட்சிகள் முரளி, முத்துகிருஷ்ணன், குஞ்சுப்பிள்ளை, ஜெயா ஆகியோர்கள் என்னிடம் அளித்த வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த வழக்கிற்கு எதிர்வழக்காக சாலை விபத்தில் அ.சா.1 முதல் 3 வரையிலான சாட்சிகளுக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்திக்கொண்டு இந்த வழக்கு தவறாக ஜோடித்துப்போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான், அ.சா.3 குஞ்சுப்பிள்ளை அ.சா.4 ஜெயா ஆகியோர்கள் தங்களுக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் ஒரு மாதிரியாகவும், எங்களிடம் அளித்த வாக்குமூலத்தில் வேறு மாதிரியாகவும் சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நிழல்நிலை புகார்தாரர் முரளி மருத்துவரிடம் தனக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்று சொல்லிய விவரத்தை நான் விபத்து பதிவேட்டு ஆவணம் மூலம் படித்துபார்த்தேனா என்றால் படித்துபார்த்துள்ளேன். அதில் அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டதாக சொல்லியுள்ளார் என்றால் தன்னை தெரிந்த 10 நபர்கள் இரும்பு கம்பியால் 29.11.2016 ஆம் தேதி காலை 9 மணியளவில் வடகண்டம் அருகே அடித்துக்காயப்படுத்தியதாக கூறியுள்ளார். ஆனால் நான்தாக்கல் செய்த குற்ற அறிக்கையில் 7 நபர்கள்தான் இவ்வழக்கு சம்பவத்தில் ஈடுபட்டதாக

சொல்லியுள்ளேன் என்றும், 10 நபர்கள் எப்படி 7 நபர்களான மாறினார்கள் என்பது குறித்து முரளியை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோன்று சாட்சி குஞ்சுப்பிள்ளை தன்னை தெரிந்த 8 நபர்கள் இரும்பு கம்பியால் திருக்கண்ணமங்கையில் உள்ள தனது வீட்டிடம் கடந்த 29.11.2016 ஆம் தேதி காலை 8 மணியளவில் அடித்து காயப்படுத்தியதாக தனக்கு சிகிச்சையளித்த மருத்துவரிடம் சொல்லியுள்ளார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அவர் சொன்னதுபோல சம்பவம் நடந்ததா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல, சொன்ன இடத்தில் வைத்து எதிரிகளை கைது செய்ததாக, சொல்லியுள்ள விவரம் தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிரி தமிழ்வாணன் எந்தவித ஒப்புதல்வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் கைப்பற்றுதல்மகசர் ஆவணங்கள் மற்றும் வழக்கு சொத்துக்கள் அனைத்தும் என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. அதனால்தான், எதிரி தமிழ்வாணனை கைது செய்ததாக சொல்லப்பட்ட இடத்தில் எந்தவித வசதி வாய்ப்பும் இல்லாதபோது, அவர் கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல்வாக்குமூலங்கள், கைப்பற்றுதல் மகசர்கள் ஆகியவைகள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் ஆவணங்கள் எங்கு வைத்து பிரிண்ட் எடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. 1 ஆம் எதிரியிடமிருந்து எந்தவித ஒப்புதல்வாக்குமூலமும் பெறவில்லை என்றும், வழக்கு சொத்துக்களும்

கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்துக்கள் என்னால் வழக்கிற்காக உருவாக்கப்பட்டவை என்பதால் தான் சாட்சிகளின் வாக்குமூலங்களில் சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்டது ஆணி பிடுங்கும் கம்பிபாரை என சொல்லப்பட்ட நிலையில், என்னால் தயார் செய்த மகசர் மற்றும் படிவம் 91 ல் கடப்பாரை என்று வழக்கு சொத்து மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் நான் கைப்பற்றிய இரும்பு கம்பி கடப்பாரையும் இல்லை, ஆணிபிடுங்கும் கம்பிபாரையும் இல்லை. நான் கைப்பற்றிய அருவாளும் கதிர் அறுக்கும் அருவாள் இல்லை என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கு சம்பந்தமாக மரக்கம்பு எதுவும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் இல்லை. இந்த வழக்கு சம்பவத்தில் இவ்வழக்கு எதிரிகள் ஈடுபடவில்லை என்றும், நிழல்நிலை புகார்தாரருக்கு ஆதரவாக விபத்து வழக்கை மாற்றி இந்த வழக்கு தவறாக போடப்பட்டதால்தான், எந்த எந்த இடத்தில் சம்பவம் நடந்தது?, எப்படி காயம் ஏற்பட்டது?, எத்தனை நபர்கள் குற்ற சம்பவத்தில் ஈடுபட்டனர்?, எந்த பொருளை வைத்து தாக்கினார்கள் என்பதை குறித்து உறுதியாக சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

G KRISHNAN

Digitally signed by G KRISHNAN
DN: cn=G KRISHNAN, c=+91
Date: 2024.10.01 11:54:17 +0530